1994 ஏப்ரல் 4]

அடங்கி இருப்பதாலும், அவிநாசி வட்டம் ஏற்கெனவே தொழிலில் பின் தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டு இருப்பதாலும் அந்த தொகுதியில் உள்ள அவிநாசி வட்ட்த்தில் உள்ள தொழிற்சாலைகளுக்கு பின் தங்கிய வட்டங்களுக்கான சலுகைகளை அரசு அளித்து வருகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவினாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சீனியம்மாளுடன் சேர்ந்து அந்த சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 174, திருமதி கவி நிலவு தர்மராஜ்; மாண்புமிகு கல்வி அமைச்சர்.

174–

மொடக்குறிச்சி தொகுதி, வடுகப்பட்டியில் நூலகம் அமைத்தல்

***19517 –திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

மொடக்குறிச்சி தொகுதி, வடுகப்பட்டியில் நூலகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கல்லாமையை இல்லாமை ஆக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே தமிழகம் எங்கும் அறிவொளி இயக்கம் கண்டு அறியாமை இருளை போக்கிக் கொண்டிருக்கிற அன்பு தெய்வம் புரட்சித் தலைவியினுடைய பொன்னான ஆட்சியிலே மொடக்குறிச்சி தொகுதியிலே இருக்கக் கூடிய 4 பேரூராட்சிகளிலே வடுகப்பட்டியும் ஒன்றாக இருக்கிற காரணத்தாலும் விவசாய பெருங்குடி மக்களை, கல்வி கூடங்களுக்கு செல்ல இயலாத கிராமீய சிறுமிகளும் சிறுவர்களும் அதிகம் இருக்கிற மொடக்குறிச்சி தொகுதியினுடைய வடுகப்பட்டி பேரூராட்சிக்கு நூலகம் ஒன்று அமைத்துக்கொடுப்பார்களேயானால்,

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றணைத் தூறும் அறிவு"

என்பதற்கு எடுத்துக்காட்டாக பள்ளி செல்ல இயலாதவர்கள் நூலகத்திற்கு சென்று கற்று அறிவதற்கான வாய்ப்பை முதியோர் கல்வி மூலம் அவர்கள் பெறுவதற்கு இயலக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மீண்டும்

ஆய்வு செய்து நடமாடும் நூலகத்தையாவது, முதற்கட்ட நடவடிக்கையாக ஒரு போர்க்கால நடவடிக்கையாக எடுத்து வடுகப்பட்டி மக்களுடைய அறியாமை இருளை அகற்றி அறிவொளி ஊட்டுவதற்கு ஆவன செய்வாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடுகப்பட்டியில் கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 8181 என்று இருக்கிறது. இதுவரை கிளை நூலகம் அல்லது பகுதிநேர நூலகம் திறக்கக் கோரி ஊர் பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனத்திடமிருந்து கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை. கிளை நூலகம் திறக்க வேண்டுமானால் இவ்வூர் பொதுமக்கள் அல்லது உள்ளாட்சி நிறுவனம் அல்லது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறைந்தது 10 சென்ட் காலி மனையை பத்திரப் பதிவு செய்து தரவேண்டும். வாடகை இல்லாமல் இலவச கட்டிடம் குறைந்தது 400 சதுர அடி பரப்பளவு வழங்க வேண்டும். 20,000 ரூபாய் ரொக்கம் மற்றும் நூலக தளவாடங்கள் வழங்க வேண்டும். நடமாடும் நூலகம் பற்றி கேட்டு இருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்க ஏற்பாடு செய்யும்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஏற்கனவே இந்த வினாவை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் 6 மாதங்களுக்கு முன்பாக நான் எடுத்து வைத்து அவர்களுடைய ஆலோசனையின் பேரிலே, உரிய இடத்தையும், உரிய தொகையையும் அந்த கிராமிய மக்களின் மூலம் பெற்றுத் தருவதற்கு ஒப்புதலையும் அளித்து என்னுடைய மூலமாகவும், வடுகப்பட்டி பேரூராட்சியினுடைய பொதுமக்கள் மூலமாகவும் பஞ்சாயத்திலே தீர்மானம் போட்டு, மாவட்ட நூலக அதிகாரி அவர்களுக்கு முறையாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் 8,000க்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட அந்த வடுகப்பட்டியிலே ஒரு நூலகத்தை அமைத்துத் தருவதற்கு 10 சென்ட் மட்டுமல்ல 20 சென்ட் புறம்போக்கு நிலம் எங்களுக்கு அங்கு அதிகம் இருக்கின்ற காரணத்தினாலும் நாங்கள் உடனடியாக கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம். அங்கே நல்லதொரு நூலகம் அமைவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் கருணை கூர்ந்து பரிசீலித்து நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபந்தனைகள் நிறைவு செய்யப்பெற்று, முன்மொழிவு பெறப்பட்டிருந்தால் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 175, திரு. கு. சீனிவாசன் ; மாண்புமிகு கல்வி அமைச்சர்.

175–

மன்னார்குடியில் பெண்கள் அரசினர் கலைக் கல்லூரி அமைத்தல்.

*21040–**திரு. கு. சீனிவாசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) மன்னார்குடியில் பெண்களுக்கென ஓர் அரசினர் கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மன்னார்குடியில் அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறினார்கள். நாகை காய்தே மில்லத் மாவட்டத்தில் நாகப்பட்டினத்தில் ஒரு பெண்கள் கல்லூரியும், மயிலாடுதுறையில் ஒரு பெண்கள் கல்லூரியும் இருக்கிறது. மன்னார்குடி பகுதியிலிருந்து மயிலாடுதுறை செல்ல வேண்டுமானால் கிட்டத்தட்ட 70 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். அதேபோன்று நாகப்பட்டினத்திற்கு செல்ல வேண்டுமானால் 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. இந்த மன்னை பகுதியிலே மன்னார்குடி, திருவாரூர், திருத்துறைபூண்டி, வேதாரண்யம், ஒரத்தநாடு போன்ற பகுதிகளிலிருந்து கிட்டத்தட்ட 25 மேல்நிலை பள்ளிகளில் படிக்கின்ற மாணவியர்கள் தங்களுடைய உயர் கல்வியைப் பயில வேண்டுமானால் மயிலாடுதுறை அல்லது நாகப்பட்டினம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் குறைந்தது 50 கிலோ மீட்டர் தூரம் கடந்துதான் அவர்கள் படிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதி மாணவிகள் தங்களுடைய உயர் கல்வியை பயில்வதற்கு வாய்ப்பாக அரசு ஒரு கலைக் கல்லூரியை அமைப்பதற்கு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.